துறையைப் பொறுத்தவரையில் மானியம் சேங்ஷன் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். மானியம் சாங்ஷன் செய்த பிறகு, கடன் கொடுக்கப்பட்டால் மின்சாரம் வழங்குவதற்கு, முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. வ. சத்தியமூர்த்தி, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பாசனத்துறை குறித்து 1985-86 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழு அளித்த முதலாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன். அளிக்கப்பட்ட அறிக்கையில், பக்கம் 12, வரிசை எண். 9, பரிந்துரை எண் 9, பத்தி 24 நீக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்து அமைகிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகள் பற்றிய பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த எட்டாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தேழாவது அறிக்கையை அளிக்கிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1992 எப்ரல் 23

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின், 1977-78 மற்றும் 1978—79 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்களின் மீதான அறிக்கையில் வணிக வரிகள் மற்றும் அறநிலையத்துறை மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் நாற்பத்தி எட்டாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தெட்டாவது அறிக்கையை அளிக்கிறேன்.

(3) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1966-67 முதல் 1971—72 வரையிலான ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முந்தைய அறிக்கைகள் நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் பத்தாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் தொழில் துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தொன்பதாவது அறிக்கையை அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின், 1980-81 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (சிவில்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்பான பத்திகள் மீது, பொது நிறுவனங்கள் குழு, (1989-90) அளித்த ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 47-வது அறிக்கை, மற்றும், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வணிகம், தொழில்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1989-90) 17-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது, அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுக்கள் 48-வது அறிக்கை மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிர்வாகம், மற்றும் குடிநீர் வழங்கு துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1985-86) அளித்த 20-வது அறிக்கையில் கண்டு